# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2017.09.11 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)


# நகர சபைகள் (திருத்தம்)

**(255 ஆம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது.


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 6.00 தபாற் செலவு : ரூபா 10.00

***சட்டப்பயன் பற்றிய கூற்று***

***வாசகம் 2*** : இவ்வாசகம், (255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவை மாற்றீடுசெய்வதுடன், மாற்றீடுசெய்யப்பட்டவாறான புதிய பிரிவின் சட்டப்பயனானது, நகரசபைகளின் அமைப்பைத் திருத்துவதாகும்.

ச. வ.- ஓ. 50/2017

**(255 ஆம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, நகரசபைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

255 ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**2.** (255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"நகர சபைகளின் அமைப்பு.

5. (1) ஒவ்வொரு நகரசபையும் -

(அ) (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 3இ மற்றும் 3ஈ என்னும் பிரிவுகளின்கீழ் வெளியிடப்பட்ட கட்டளைகளின் அடிப்படையில், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்டவாறானவர்களும்;

(ஆ) (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65ஆ என்னும் பிரிவின் நியதிகளின்படி தெரிந்தனுப்பப்பட வேண்டியவர்களும், (அ) என்னும் பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை மூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்டவாறானவர்களுமான நகரசபை உறுப்பினர்களின் எண்ணிக்கையினருள் நாற்பது சதவீதத்துக்குச் சமமானவர்களும்; அத்துடன்

2 -PL 005435 - 475 (2017/09)

(இ) (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65ஆ என்னும் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்டவர்களும்,

ஆன நகர சபை உறுப்பினர்களின் அத்தகைய எண்ணிக்கையினரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட நாற்பது சதவீதமாக அமைகின்ற எண்ணானது ஒரு முழுவெண்ணாகவும் பின்னமாகவும் இருக்குமிடத்து, அம்முழுவெண்ணானது, அவ்வுட்பிரிவின் நோக்கத்துக்காக, அத்தகைய நாற்பது சதவீதமாக அமையவேண்டிய எண்ணாகக் கருதப்படுதல் வேண்டும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**3.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*